


விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை ஆரணி எம்.பி. எம்.எஸ். தரணிவேந்தன் தொடங்கி தொடங்கி வைத்துகர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்துடன் கூடிய நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன்செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், துணை சேர்மன் ஜெயபாலன் மாவட்ட கவுன்சிலர்கள் அரங்க ஏழுமலை, அகிலா பார்த்திபன், பிடிஓக்கள்நடராஜன், பிரபா சங்கர் உள்ளனர்.




விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் மழவந்தாங்கல் அரசு மேல்நிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் கட்டுவதற்கு முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பணியை தொடங்கி வைத்தார். உடன் விஜயகுமார், விஜயராகவன், திருநாவுக்கரசு, திருமாவளவன், கற்பகம், அரவிந்த் மற்றும் பலர் உள்ளனர்.

### பேரிடர் மீட்புப் பணிகளுக்குத் தேவைப்படும்

# கனரக வாகனங்கள் வெளிநாடுகளில் இருந்து கொள்முதல் செய்யப்படுமா?

## சட்டப் பேரவையில் – பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி கேள்வி!

சென்னை, அக்.18- சட்டப் பேரவையில் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி கேட்ட கேள்வியும் அக் கேள்விக்கு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர். இராமச்சந்திரன் அளித்த பதிலும் வருமாறு:-

**கு. பிச்சாண்டி:** பேரிடர் மீட்புப் பணிகளுக்குத் தேவைப்படும் கனரக வாகனங்களை உள்ளூர் கொள்முதல் அல்லது வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதற்கு அரசு முன்வருமா?

**அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.இராமச்சந்திரன்:** நிலச் சரிவு மற்றும் பெருநகரங்களில் வெள்ளம் போன்ற பேரிடர்களின்போது பயன்படுத்தக் கூடிய வகையில், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புத் துறையில் ஒன்பது TROOP CARRIER நான்கு சக்கர வாகனங்கள் எனப்படும் கனரக வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளன. மாநில பேரிடர் மீட்புப் படையினரிடம், வீரர்கள் மற்றும் படகுகுளை ஏற்றிச் செல்லக்கூடிய நான்கு TROOP CARRIER நான்கு சக்கர வாகனம் எனப்படும் கனரக வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளன. மேலும், கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.193.93 கோடி செலவில் மீட்புப் படையினருக்கு வேண்டிய மீட்பு உபகரணங்கள் மற்றும் கனரக வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன. பேரிடர்களை திறம்பட எதிர்கொள்ள அனைத்து வகையான ஆயத்த மற்றும் மீட்பு நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது.

**கு. பிச்சாண்டி:** பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்த நாடானாலும், வளரும் நாடானாலும் இயற்கை பேரிடர்களிலிருந்து தப்புவதில்லை. சமீப காலமாக இந்த பேரிடர்களால் ஏற்படும் உயிரிழப்புகளும், பொருள் இழப்புகளும் அதிகரிப்பதை காண முடிகிறது. வர்தா புயல், ஒகி புயல் என பல புயல்கள் தமிழ்நாட்டை தாக்கியுள்ளன. ஆனால் மீட்புப் பணியில் காட்டப்பட்ட முனைப்பு காரணமாக 2023 ஆம் ஆண்டு தாக்கிய மிக்ஜாம் புயல் பாதிப்பிலிருந்து மக்களை விரைவாக காப்பாற்றி பெரும் சேதம் தவிர்க்கப்பட்டு, திராவிட மாடல் அரசு மக்களின் பாராட்டைப் பெற்றது. இன்னும் சிறப்பாக செயல்பட வேண்டுமானால் மீட்பு பணிக்கான தளவாடங்களை மேலும் மேம்படுத்த வேண்டும். பஞ்சாப் மாநிலத்தில் சமீபத்தில் நடந்த பெருவெள்ள சேதத்தை மீட்பதற்கு, பேரிடர் மீட்பிற்கு அந்த அரசு ATOR N1200 எனும் தண்ணீரிலும், தரையிலும் பயணித்து மீட்புப் பணிகளை செய்யக்கூடிய வாகனம் பயன்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. அதுபோன்ற வாகனங்களை தமிழக அரசு வாங்க முன்வருமா என அறிய விரும்புகி றேன்.



**அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர். இராமச்சந்திரன்:** துணை சபாநாயகர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலித்து, அதிகாரிகளை அங்கே அனுப்பி அதுபோன்ற சாதனங்களை நாம் பயன்படுத்தினால் சரியாக வருமா என்பதை பார்த்து தகுந்த முன்னேற்பாடு பணிகளைச் செய்யும்.

**கு. பிச்சாண்டி:** CAMBRIDGE பல்கலைக்கழக வெளியீடு ஒன்றை சமீபத்தில் படிக்க நேர்ந்தது. அதில் தரையிலும், தண்ணீரிலும் பயணிக்கும் தொழில்நுட்பத் தன்மை கொண்ட "TORTUGA AMPHIBIOUS VEHICLE" எனும் பேரிடர் மீட்பு வாகனம் குறித்து விளக்கப்பட்டிருந்தது. அந்த வாகனம் மேடு, பள்ளங்களை எளிதாக கடந்து செல்லும் தன்மையுடன் இயங்குவதோடு, பெரு வெள்ளத்தோடு தொடர்பு துண்டிக்கப்பட்ட பகுதியில் சிக்கியுள்ளவர்களை மீட்டு அவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் முன்பாக, அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய அவசரகால மருத்துவ சிகிச்சை அளிக்கும் வசதிகளையும் உள்ளடக்கியதாக உருவாக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டிருந்தது. எனவே, பேரிடர் மீட்பினை விரைவாகவும், சிறப்பாகவும் மேற்கொண்டு உயிர் சேதங்களையும், பொருட்சேதங்களையும் தவிர்த்திட நவீன பேரிடர் மீட்பு வாகனங்களை கொள்முதல் செய்து, அரசு தயார் நிலையில் வைத்திருக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். பேரிடர் மீட்புப் பணிக்காக தனியாக ஒரு நிதி ஆணையத்தை உருவாக்கி, பேரிடரால் ஏற்படக்கூடிய பாதிப்புகளுக்கு வழங்கக்கூடிய அந்த நிறுவனங்களிடமிருந்து பேரிடர் மீட்பு நிதிக்கு தனியாக பணம் வசூலித்து, அதன்மூலம் பணிகளை ஆற்றுவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.இராமச்சந்திரன்: துணை சபாநாயகர் அவர்கள் அரசுக்கு நல்ல யோசனையை சொல்லியிருக்கிறார்கள். நான் ஏற்கெனவே சொன்னதுபோல், அதிகாரிகளை அங்கே அனுப்பி, இயந்திரங்களை பார்வையிட்டு, அது தகுதியாக இருக்குமென்று சொன்னால், அரசாங்கம் வாங்குவதற்கு வேண்டிய முயற்சிகளை, நம்முடைய முதலமைச்சர் அவர்களின் கருத்திற்கு கொண்டுசென்று, அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுப்போம். தற்போது பேரிடருக்கு என தனியாக நிதியிருக்கிறது. அந்த நிதியிலிருந்துதான் மத்திய அரசும், மாநில அரசும் பங்கு வகித்து அந்தப் பணிகளை செய்துகொண்டிருக்கிறோம். அதற்கு வேண்டிய நிதியை நிச்சயமாக மத்திய அரசாங்கம் கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும், நம்முடைய அரசாங்கம், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அந்த நிதியை வழங்கி, நமக்கு வேண்டிய உபகரணங்களை வாங்குவதற்கு வேண்டிய முயற்சிகளை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மூலமாக செய்து முடிப்போம்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### பஞ்சாப் மாநில முதலமைச்சர்

# பகவந்த் மான் பிறந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, அக். 18- பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-**



பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்து கள்.

அவர் மகிழ்ச்சியுடனும், வெற்றி மற்றும் நீண்ட ஆயுளுடன் வாழ வாழ்த்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### செங்கம் நகராட்சி - பழைய சிறைச்சாலையை அகற்றி

# புதிய நீதிமன்றம் உள்ள இடத்தில் புதிய சிறைச்சாலை கட்டப்படுமா?

## சட்டப்பேரவையில் - செங்கம் மு.பெ.கிரி கேள்வி!

சென்னை, அக்.18- சட்டப்பேரவையில் செங்கம் மு.பெ.கிரி கேட்ட கேள்வியும் அதைத் தொடர்ந்து அமைச்சர் எஸ்.ரகுபதி அளித்த பதிலும் வருமாறு:-

மு.பெ. கிரி: பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் நகராட்சிப் பகுதியில் இருக்கிற வட்டாட்சியர் அலுவலகத்தில் 1929 ஆம் காலத்திலே கட்டப்பட்ட சிறைச்சாலை இருக்கிறது. அந்தச் கிளைச் சிறைச்சாலை தற்போது ஒருங்கிணைந்த நீதிமன்றம், செங்கம் நகராட்சியையொட்டி புறவழிச்சாலை அமையவிருக்கின்ற இடத்தில் புதிதாக கட்டப்பட்டுவிட்டது. மக்கள் நெருக்கடி அதிகமாக உள்ள இடத்திலிருக்கிற அந்தப் பழைய சிறைச்சாலையை முழுவதுமாக அகற்றித் தந்து, புதிய நீதிமன்றம் உள்ள இடத்தில் சிறைச்சாலை கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



அமைச்சர் எஸ்.ரகுபதி: புதிய சிறைச்சாலைகள் கட்டுகின்ற எண்ணம் எதுவும் தற்போதைக்கு இன்றைய சூழ்நிலையிலே அரசுக்கு கிடையாது. அதேநேரத்தில், மாவட்ட சிறைச்சாலைகளையெல்லாம் விரிவுப்படுத்தி, அங்கே அதிகமான வசதிகளோடு அங்கிருக்கக் கூடிய சிறைவாசிகளுக்கு எல்லா விதமான அடிப்படை வசதிகளையும் செய்து தர வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். இன்றைக்கு திராவிட மாடல் ஆட்சியிலேதான், இந்தியாவிலேயே சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறைகளிலே முதன்மையான இடத்தில் தமிழ்நாட்டின் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். உறுப்பினர் கோரிய படி, அங்கே புதிதாக எந்தக் கட்டடமும் கட்டுவதற்கான பரிசீலனை, தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### ரிஷிவந்தியம் தொகுதி – மணலூர்பேட்டையில்

# ரூ.75 கோடியில் தடுப்பணை கட்டிட ஆணை!

## சட்டப்பேரவையில் ரிஷிவந்தியம் – வசந்தம் க.கார்த்திகேயன் நன்றி!

சென்னை, அக். 18 - சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது ரிஷிவந்தியம் தொகுதி வசந்தம் க.கார்த்திகேயன் கேட்ட கேள்வியும் அக்கேள்விகளுக்கு நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் அளித்த பதிலும் வருமாறு:

**வசந்தம் க.கார்த்திகேயன்:** சங்கராபுரம் ஒன்றியம், முசுகுந்தா ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்க அரசு முன்வருமா?

**அமைச்சர் துரைமுருகன்:** சங்கராபுரம் ஒன்றியம், புளியங்கேட்டை மலைப் பகுதியின் அருகே கல்வராயன் மலைத்தொடரிலிருந்து உற்பத்தி ஆகும் முசுகுந்தா ஆற்றின் குறுக்கே எல்.என். பட்டி கிராமத்தில் நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம் ஆய்வில் உள்ளது. உறுப்பினர், நீங்கள் இதைக் கவனிக்க வேண்டும். தொழில்நுட்ப பொருளாதாரரீதியாகவும், நீரியல் ரீதியாகவும் சாத்தியக்கூறுகள் இருக்கும்பட்சத்தில் நிதிநிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் இத்திட்டம் பரிசீலிக்கப்படும்.

**க.கார்த்திகேயன்:** ரிஷிவந்தியம் தொகுதியினுடைய 50 ஆண்டுகால கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், முதலமைச்சர் அவர்களும், துணை முதலமைச்சர் அவர்களும், நீர்வளத் துறை அமைச்சர் அவர்களும், பொதுப் பணித் துறை அமைச்சர் பொறுப்பு அமைச்சர் அவர்களும், மணலூர்பேட்டையில் 75 கோடி ரூபாயில் தடுப்பணை கட்டித தருவதற்கு ஆணை பிறப்பித்தமைக்கு முதலில் தொகுதி மக்களின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



இந்த முசுகுந்தா ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுவதற்கு தேவைப்படுகின்ற போதிய இடத்தினை அரசுக்குத் தானமாக வழங்குவதற்கு மக்கள் தயாராக இருக்கிறார்கள். அந்தத் தடுப்பணையை விரைந்து கட்ட அரசு முன்வருமா?

அமைச்சர் துரைமுருகன்: இந்தப் பகுதியில் அணை கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதா என்பது குறித்து சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னரே ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அப்போது, பயன்பாட்டு செலவு விகிதம் (BC RATIO) குறைவாக இருந்த காரணத்தால் அத்திட்டத்தை கைவிட்டுவிட்டார்கள். பின்னர், ஆயக்கட்டுதாரர்கள் தொடர்ந்து வலியுறுத்தியதால், 2005 ஆம் ஆண்டு இத்திட்டம் மீண்டும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின்மூலம் சுமார் 2.50 இலட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் என்று சொல்லப்பட்டது.

இத்திட்டத்தினை செயல்படுத்த சுமார் 62 ஏக்கர் பட்டா நிலம், 30 ஏக்கர் புறம்போக்கு நிலம் மற்றும் 16 ஏக்கர் வன நிலம் தேவைப்படுகிறது. இத்திட்டத்திற்கு விரிவான தல ஆய்வுகள், மட்ட அளவுகள், மண் மாதிரிகள் சேகரித்து விரிவான வடிவமைப்புடன் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்படும். எனினும், நான் முன்னரே கூறியதுபோன்று, சாத்தியக்கூறுகள் இருக்கும் பட்சத்தில், நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

**க. கார்த்திகேயன்:** முந்தைய 10 ஆண்டுகால ஆட்சியில் செய்யாத திட்டங்களை கடந்த 4½ ஆண்டுகால ஆட்சிக் காலத்தில் நீர்வளத் துறையின் மூலமாக மட்டும் எங்கள் தொகுதியில் 200 கோடி ரூபாய் அளவில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன.

அப்படிப்பட்ட இந்தத் துறையின்கீழ் பாக்கம்பாடி அணைக்கட்டும், அதே போல் ராமராஜபுரம் வாய்க்காலும் தூர்வாரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் துரைமுருகன்: தூர்வாருவதிலேயே ஒரு DOCTORATE வாங்கியிருக்கிறீர்கள். அவருடைய தொகுதியில் கடந்த 4 ஆண்டுகளில் பழைய சிறுவாங்கூர் ஏரியை புனரமைத்தல் ரூ.21.47 கோடி; பழைய கொரக்கசந்தல் ஏரி புனரமைத்தல்ரூ.10.61 கோடி; பள்ளிப்பட்டு ஏரி புனரமைத்தல்ரூ.14.65 கோடி; வேளானந்தல் ஏரி புனரமைத்தல்ரூ.13.28 கோடி; கலையநல்லூர் பெரிய ஏரி புனரமைத்தல் ரூ24.43 கோடி; களையநல்லூர் சித்தேரி புனரமைத்தல்ரூ.20.29 கோடி; பல்லகச்சேரி ஏரி மற்றும் அணைக்கட்டு புனரமைத்தல்ரூ.1.10 கோடி என பல்வேறு ஏரிகளில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல 7 அணைக்கட்டுகள், கால்வாய்களை சீரமைக்க ரூ.5.31 கோடியில் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல, மணிமுத்தா அணை ஷட்டர் சீரமைக்க ரூ.2.34 கோடியிலும், மேமாளூர் ஏரி மற்றும் அணைக்கட்டுகளை புனரமைக்க ரூ.8.00 கோடியிலும் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆக, இந்தத் தொகுதியில் கடந்த 4 ஆண்டுகளில் ரூ.122 கோடிக்கான பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

அதுமட்டுமல்லாமல், மணலூர்பேட்டை கிராமத்தில் அதன் இருபுறமும் உள்ள 3 கண்மாய்களுக்கு ஏற்கெனவே உள்ள கால்வாய்கள்மூலம் தண்ணீர் வழங்க தென்பெண்ணையாற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைக்க ரூ.75 கோடியிலும், மணிமுக்தா அணை பழுதடைந்த ஷட்டர்களை புதியதாக மாற்றும் பணிக்காக ரூ.20.76 கோடியும் என இந்தத் தொகுதியில் தற்போது ரூ.95.76 கோடிக்கான பணிகள் நடைபெறுகின்றன.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதி

# பகுதிநேர நியாய விலைக் கடையை முழு நேரக் கடையாக மாற்றுக!

## சட்டப்பேரவையில் பெ.சு.தி. சரவணன் கோரிக்கை!

சென்னை, அக்.18– சட்டப்பேரவையில் கலசபாக்கம் தொகுதி உறுப்பினர் பெ.சு.தி. சரவணன் கேட்ட கேள்வியும் அதற்கு அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் அளித்த பதிலும் வருமாறு:–

**பெ.சு.தி. சரவணன்:** கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, பட்டியந்தல், ஆதமங்கலம்புதூர், அரியாரிமங்கலம் போன்ற பகுதிகளில் உள்ள பகுதிநேர நியாய விலைக் கடைகள் 500க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகள் இருந்தும், முழு நேரக் கடைகள் இயங்குவதற்குண்டான அனைத்து விதிமுறை களுக்குட்பட்டிருந்தாலும், அவையனைத்தும் பகுதிநேரக் கடைகளாகவே இயங்கிக் கொண்டிருக்கின்றன. அமைச்சர் அவற்றை முழு நேரக் கடைகளாக மாற்றித் தருவதற்கு முன் வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அறிய விரும்புகிறேன்.



அமைச்சர் **கேஆர்.பெரிய கருப்பன்:** ஏற்கெனவே குறிப்பிட்டவாறு 500 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமல் இருந்தால், அவை முழு நேரக் கடைகளாக மாற்றி அமைத்துத் தரப்படும். அந்தவகையில், உறுப்பினர் அவர்கள் தங்களது கோரிக்கையை என் கவனத்திற்குக் கொண்டுவந்தாலும் அல்லது மாவட்ட அளவில் அது குறித்து தெரிவித்தாலும், அந்தக் கோரிக்கை நிறைவேற்றித் தரப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



கள்ளக்குறிச்சி மாவட்டம், வாணாபுரம் புதிய வட்டாட்சியர் அலுவலகக் கட்டடக் கட்டுமானப் பணிகளை ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. மாவட்ட ஆட்சியர் எம்.எஸ்.பிரசாந்த் ஆகியோர் அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்கள், இந்நிகழ்ச்சியில் புவனேஷ்வரி பெருமாள், வடிவுக்கரசி சாமி சுப்ரமணியன், சென்னமாள் அண்ணாதுரை, பெருமாள், துரைமுருகன், பாரதிதாசன், அசோக்குமார், ஜெய்கணேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.